Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
College House

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 140 | உள்ளூர் - 20.05.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 140 | வெளியூர் - 21.05.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**நீங்கள் எந்த வயதில் கோடீஸ்வரர் ஆவீர்கள்!**

**தமிழக அமைச்சரவை விரிவாக்கம்!**

**8-வது ஊதியக்குழு அமலாக்கம் 2027-ல்?**

**வெளியாகும் அஜித்தின் 'கிளாடியேட்டர்ஸ்'!**

# தமிழக அமைச்சரவை விரிவாக்கம்!



சென்னை, மே. 20–

கடந்த 10–ந் தேதி த.வெ.க.வின் தலைவர் விஜய் முதல்–அமைச்சராக பதவி ஏற்றார். அவருடன் ஆனந்த், ஆதவ் அர் ஜுனா, அருண்ராஜ். செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், பிரபு, கீர்த்தனா ஆகிய 9 அமைச்சர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

முதல்–அமைச்சர் உள்ளிட்ட 10 அமைச்சர்களுக்கும் கடந்த 16–ந் தேதியன்று துறைகள் ஒதுக்கப்பட்டன. என்றாலும், வனத்துறை, வேளாண்மை, வருவாய், வீட்டுவசதி, கூட்டுறவு, குறு சிறு நடுத்தர தொழில்கள் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு அமைச்சர்கள் நியமனம் இன்னும் நடக்கவில்லை.

த.வெ.க.விற்கு கம்யூனிஸ்டு கட்சிகள், காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், ஐ.யூ.எம்.எல். கட்சிகள் ஆதரவு அளிக்கின்றன. அ.தி.மு.க.வில் இருந்து பிளவுபட்டு 25 எம்.எல்.ஏ.க்கள் த.வெ.க.வை ஆதரிக்கின்றனர். ஆட்சி அமைக்க 118 எம்.எல்.ஏ.க்கள் போதும் என்ற நிலையில், சட்டசபையில் த.வெ.க.வின் பலம் 144 ஆக உள்ளது.

தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சிக்கு 2 இடங்கள் தரப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. காங்கிரசில் உள்ள 5 எம்.எல்.ஏ.க்களில் ராஜேஷ்குமார், விஸ்வநாதன் ஆகிய 2 பேர் அமைச்சரவையில் இடம் பெற வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இவர்களில் ஒருவருக்கு மீன்வளத்துறை ஒதுக்கப்படுகிறது. அதோடு, அ.தி.மு.க.வில் இருந்து பிளவுபட்டு, த.வெ.க.வை ஆதரிக்கும் 25 எம்.எல்.ஏ.க்களில் சிலர் அமைச்சரவையில் இடம்பெறவிருப்பம்தெரிவித்துள்ளதாக தெரிகிறது. அவர்களில் எஸ்.பி. வேலுமணி, சி.வி.சண்முகம், டாக்டர் சி.விஜயபாஸ்கர் உள்பட 6 பேருக்கு அமைச்சரவையில் இடம் கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே, காங்கிரஸ், அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களைக் கொண்டு, தமிழக அமைச்சரவை விரிவுபடுத்தப்பட உள்ளது. தமிழகத்தை பொறுத்த அளவில் முதல்–அமைச்சர் மற்றும் 33 அமைச்சர்கள் இடம் பெறலாம். எனவே மீதமுள்ளவர்கள், த.வெ.க.வில் இருந்து தேர்வு செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது. இந்த சூழ்நிலையில் இன்று சென்னைக்கு கவர்னர் அர்லேகர் வருகிறார். அவர் நாளை (21–ந் தேதி) புதிய அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# இத்தாலி சென்றார் மோடி!



ரோம், மே. 20–

இத்தாலி சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமருடன் ஒரே காரில் பயணித்து வரலாற்றுப் புகழ் பெற்ற கொலோசியம் அரங்கை பார்வையிட்டார்.

மேற்காசியா மற்றும் ஐரோப்பாவில் உள்ள ஐந்து நாடுகளுக்கு அரசு முறை பயணமாக பிரதமர் மோடி சென்றுள்ளார். வெளிநாட்டு பயணத்தின் இறுதிக்கட்டமாக இத்தாலிக்கு பிரதமர் மோடி சென்றுள்ளார். அங்கு ரோம் நகரில் விமான நிலையத்தில் பிரதமர் மோடியை இத்தாலி நாட்டின் துணை பிரதமர் அண்டோனியோ தஜானி நேரில் சென்று வரவேற்றார்.

இத்தாலியை சேர்ந்த நடனக் கலைஞர்கள் இந்திய கலாசார நடனங்களையும், இசைக்கச்சேரியையும் நிகழ்த்தி பிரதமர் மோடிக்கு வரவேற்பு அளித்தனர். இத்தாலி சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமருடன் ஒரே காரில் பயணித்து வரலாற்றுப் புகழ் பெற்ற கொலோசியம் அரங்கை பார்வையிட்டார்.

இது குறித்து பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது: ரோமில் தரையிறங்கியதும், பிரதமர் மெலோனியை இரவு உணவின்போது சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து, வரலாற்றுச் சிறப்புமிக்க Colosseumக்கும் நான் வருகை தந்தேன். இந்தியா–இத்தாலி நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து மெலோனியுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆவலுடன் இருக்கிறேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ரோம் நகரில் எனக்கு அளித்த அன்பான வரவேற்பிற்காக, இத்தாலியில் வாழும் இந்தியச் சமூகத்தினருக்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார். அவர் ''இந்தியா–இத்தாலி உறவுகளை வலுப்படுத்துவதில் அவர்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பு உண்மையிலேயே பாராட்டுக்குரியவை. உலகெங்கிலும் வாழும் இந்தியப் புலம்பெயர் சமூகம், தொடர்ந்து நமது நாட்டிற்குப் பெருமை சேர்த்து வருகிறது'', என தெரிவித்தார். .

இத்தாலியில் இந்திய இசை மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகிறது. ரோம் நகரில் நடைபெற்ற சமூக வரவேற்பு நிகழ்ச்சியின்போது, ஐந்து இத்தாலியக் கலைஞர்கள் இசை நிகழ்த்தியதற்கு பாராட்டுகள் என பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இத்தாலிக்கு சென்றுள்ள பிரதமர் மோடியை வரவேற்கும் விதமாக அந்நாட்டு பிரதமர் ஜார்ஜியோ மெலோனி உற்சாக பதிவு ஒன்றை இணையத்தில் வெளியிட்டு இருக்கிறார். பிரதமர் மோடியுடன் செல்பி எடுத்த புகைப்படத்தை பகிர்ந்து, ''எனது நண்பரை ரோம்நகருக்கு வரவேற்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

# அயோத்திதாச பண்டிதர் சிலைக்கு முதல்-அமைச்சர் விஜய் மரியாதை!



சென்னை, மே. 20–

தமிழகத்தில் வேத பிராமணிய எதிர்ப்பு, தீண்டாமை, சாதி ஒழிப்பு, வகுப்புவாரி பிரதிநித்துவம், பெண்ணுரிமை, தமிழ்மொழி உணர்வு, சுயமரியாதை, பகுத்தறிவு போன்ற கருத்துகளை சிந்தித்த மாபெரும் அரசியல் ஞானி அயோத்திதாச பண்டிதர்.

100 ஆண்டுகளுக்கு முன் 'தமிழன்' என்ற வார இதழை 7 ஆண்டுகள் நடத்திய பத்திரிகையாளர், எழுத்தாளர், சமூக சீர்திருத்த சிந்தனையாளர், சித்த மருத்துவர், தமிழறிஞர், பௌத்த பேரறிஞர் அயோத்திதாசப் பண்டிதரின் பிறந்தநாள் தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நிலையில், அயோத்திதாச பண்டிதரின் 181–வது பிறந்தநாளையொட்டி கிண்டியில் உள்ள அவரது மணிமண்டபத்தில் உள்ள சிலைக்கு முதல்–அமைச்சர் விஜய் மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து அமைச்சர்கள் செங்கோட்டையன், ஆதவ் அர்ஜுனா, என். ஆனந்த், வெங்கடராமன், சி.டி.ஆர். நிர்மல்குமார் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர். முதல்–அமைச்சராக விஜய் பொறுப்பேற்றதையடுத்து அவர் பங்கேற்ற முதல் அரசு விழா இது என்பது குறிப்பிடத்தக்கது.

# எபோலா பரவலுக்கு காங்கோவில் 131 பேர் பலி!



கின்ஷாசா, மே. 20–

காங்கோ நாட்டின் கிழக்கு பகுதியில் எபோலா வைரசின் பரவல் அதிகரித்து காணப்படுகிறது. இந்த நிலையில், பொது சுகாதார மந்திரி சாமுவேல் ரோஜர் கம்பா இன்று கூறும்போது, எபோலா பாதிக்கப்பட்ட பகுதிகளில் 131 பேர் வரை பலியாகி உள்ளனர்.

இதுதவிர, 513 பேருக்கு சந்தேகத்திற்குரிய வகையிலான தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது என்று கூறினார். இந்த மரணம் சந்தேக அடிப்படையிலானவை. இருப்பினும், இந்த வியாதிக்கு உண்மையில் என்ன காரணம்? என்பது பற்றி உறுதி செய்வதற்கான விசாரணைகள் நடந்து வருகின்றன என்றார்.

இது உலகிலேயே மிக கொடிய வைரஸ் நோய்களில் ஒன்றாகும். இது உடலின் உட்புற உறுப்புகளில் கடுமையான ரத்தப்போக்கு, உறுப்பு செயலிழப்பு மற்றும் மரணத்தை ஏற்படுத்த கூடும். காங்கோவின் அண்டை நாடுகளான உகாண்டா, தெற்கு சூடான் போன்ற நாடுகளுக்கும் எபோலா வைரஸ் பரவியிருக்கும் என அஞ்சப்படுகிறது.

இதனை முன்னிட்டு, உலக சுகாதார அமைப்பின் தலைவர் ஆன்டனியோ டெட்ரோஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், எபோலா வைரஸ் காரணமாக உலக சுகாதார அவசரநிலை பிரகடனம் செய்யப்படுகிறது என்றார். இதற்கு காரணம் பண்டிபக்யோ என்ற வைரஸ் என கண்டறியப்பட்டு உள்ளது. இந்த வைரசுக்கு நோய் தடுப்பு மருந்துகளோ அல்லது தடுப்பூசிகளோ எதுவும் இல்லை. தொடர்ந்து காங்கோவில் மருத்துவ பரிசோதனைகளும் நடந்து வருகின்றன.

## தமிழகத்தில்

# பத்தாம் வகுப்பு முடிவுகள் 94.31% பேர் தேர்ச்சி

### அரசு பள்ளிகளின் தேர்ச்சி விகிதம் 91.66%




சென்னை, மே. 20–

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று (மே 20) வெளியானது. தேர்வு எழுதிய மாணவர்களில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது. தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

தமிழக பள்ளிக் கல்வி பாடத் திட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு (மார்ச் 2026) கடந்த மார்ச் 11–ம் தேதி தொடங்கி கடந்த ஏப்.6–ம் தேதி நிறைவடைந்தது. சுமார் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதினர். தொடர்ந்து விடைத்தாள் திருத்த பணிகள் தொடங்கி நிறைவடைந்தது. இந்நிலையில், இன்று சென்னை – அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

மொத்தம் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதியதாக அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார். இதில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

வழக்கம்போலவே இந்த முறையும் தேர்ச்சி விகிதத்தில் மாணவர்களை காட்டிலும் மாணவிகளே முன்னிலை வகிக்கின்றனர். தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 92.15 சதவீதம், மாணவிகளின் எண்ணிக்கை 96.47 சதவீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மாணவர்களை விட 4.32 சதவீதம் அதிகமாக மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

மாவட்ட அளவில் தேர்ச்சி விகிதத்தை பொறுத்த வரையில் புதுக்கோட்டை (97.57%), சிவகங்கை (97.54%), தஞ்சாவூர் (97.41%), திருச்சி (97.31%), கன்னியாகுமரி (97.30%) மாவட்டங்கள் முதல் 5 இடங்களை பிடித்துள்ளன.

அரசு பள்ளிகளின் ஒட்டுமொத்த தேர்ச்சி விகிதம் 91.66 சதவீதம் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

**பாட வாரியாக தேர்ச்சி விகிதம்:**

தமிழ் – 98.43%, ஆங்கிலம் 99.44%, கணிதம் 97.36%, அறிவியல் 98%, சமூக அறிவியல் 97.93%.

நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்ற மாணவர்கள்:

தமிழ் – 34 , ஆங்கிலம் – 93, கணிதம் 3194, அறிவியல் – 10476, சமூக அறிவியல் – 3336 மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றுள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில் 2.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக 40 புதிய வாகனங்களை வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சாவிகளை ஓட்டுநர்களுக்கு வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் K.G. அருண்ராஜ், தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு செயலாளர் மரு. தாரேஸ் அகமது, அரசு கூடுதல் செயலாளர் மரு. S. உமா, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.த.க.சித்ரா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தலையங்கம் மதுரை மணி
புதன்கிழமை 20.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 06-ம் தேதி

# கேரண்டி கையெழுத்து? லோன் அவங்களுக்கு! பிரச்சனை உங்களுக்கு!




அவசர காலத்திற்கு வங்கியில் வழங்கப்படும் லோன்களையே சிலர் பெரிதும் நம்பி இருக்கின்றனர். அப்படி இருக்கையில் தங்களுடைய டாக்குமெண்ட்டை மட்டும் கொடுத்தால் போதாது. கூடவே கடன் பெறுபவருக்கு ஒரு கேரண்டி கையெழுத்தும் இருந்தால் தான் வங்கிகள் கடன் தர முன்வரும். உங்கள் நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஏதோ ஒரு நேரத்தில் உங்களிடம் கேரண்டி கையெழுத்தை கேட்டிருப்பார்கள். நீங்களும் அவர்கள் மேல் உள்ள பாசம், நட்பு மற்றும் நோ சொல்ல முடியாத தர்ம சங்கடமான காரணங்களால் பேனாவை எடுத்து கையெழுத்தும் போட்டிருப்பீர்கள். நாம் லோன் வாங்கவில்லை, வெறும் கையெழுத்து தானே போடுகிறோம் என்று மட்டும் நினைக்காதீர்கள். ஏனெனில் சட்டப்படி நீங்கள் போடும் கேரண்டி கையெழுத்து உங்களை நிதி நெருக்கடியில் தள்ளிவிடும்.

**கேரண்டி (ஜாமின்) கையெழுத்து?:**

ஒருவருக்கு கடன் வழங்க பேங்க் முன் வரும் போது அவர் திருப்பிச் செலுத்துவாரா? என்ற சந்தேகம் இருந்தால் உடனே ஒரு ஜாமின்தாரரை கூட்டி வரச் சொல்லும். சில அரசாங்க ஊழியர்களுக்கு இது போன்ற பிரச்சினை ஏற்படுவதில்லை. ஆனால் தனியார் வேலைகளில் பணிபுரிபவர்கள், தங்களுடைய தொழிலை நம்பி கடன் பெறுபவர்கள் போன்றவர்களிடம் கண்டிப்பாக வங்கிகள் ஒரு ஜாமின்தாரரை கேட்கும். ஏன் இது போன்ற நடைமுறை இருக்கிறது தெரியுமா? ஒருவேளை உங்களால் கடனை சரிவர செலுத்த முடியவில்லை என்றால், அதற்கான முழு பொறுப்பை கேரண்டி கையெழுத்து போடுபவர் ஏற்க வேண்டும். எனவே நீங்கள் ஜாமின் கையெழுத்து போடுகிறீர்கள் என்றால் அவர் வாங்கும் கடனுக்கு நீங்களும் பொறுப்பு என்பதை நினைவில் கொள்ளுங்கள். சட்டம் சொல்வது என்ன?:

ஒருவர் கடனை வாங்கிவிட்டு அதை சரிவர திருப்பிச் செலுத்தவில்லை என்றால், கடன் வாங்கியவருக்கு எதிராக அனைத்து மீட்பு நடவடிக்கைகளையும் வங்கிகள் எடுக்கும். பின்னர் கேரண்டி கையெழுத்து போட்டவர் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வங்கிகளுக்கு உரிமையுண்டு. சில நேரங்களில் கடன் வாங்கியவர் மற்றும் ஜாமீன்தாரர் ஆகிய இருவரிடமும் ஒரே நேரத்தில் வங்கிகள் நடவடிக்கை எடுக்கலாம். இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 128–ன் படி கடன் பெற்றவர் மற்றும் அவருக்கு ஜாமீன் கையெழுத்து போட்டவர் இருவருக்கும் சமமான பொறுப்பு உள்ளது. அதாவது ஜாமீன்தாரர் அசல் தொகைக்கு மட்டுமல்ல வட்டி அபராதம் மற்றும் பிற கட்டணங்கள் அனைத்திற்கும் கடன் பெற்றவரை போலவே பொறுப்பாவார். கடன் பெற்றவர் சரியாக லோன் செலுத்தவில்லை என்றால் கேரண்டி கையெழுத்து போட்டவருக்கு ஏற்படும்

**பிரச்சினைகள் என்ன?:**

**சிபில் ஸ்கோர் குறையும்:**

கடன் பெறுபவருக்கு மட்டுமின்றி கேரண்டி கையெழுத்து போட்ட உங்களுக்கும் சிபில் ஸ்கோர் குறையத் தொடங்கும். இதனால் எதிர்காலத்தில் நீங்கள் லோன் பெறுவதில் சிக்கல் ஏற்படலாம். வங்கிகள், ஒருவர் தான் வாங்கிய லோனை எப்படி செலுத்தியிருக்கிறார் என்பதை சிபில் ஸ்கோரை வைத்து தெரிந்து கொண்ட பின்பு தான் மறுமுறை லோன் வழங்கும். கூடுதலாக லோன் பெற்றவர் செலுத்தாத தொகையை உங்கள் பெயரில் இருக்கும் கடனாக தான் வங்கிகள் கணக்கிடும். இதனால் பிற்காலத்தில் ஹோம் லோன், கார் லோன் மற்றும் கிரெடிட் கார்டு போன்றவற்றை பெற முடியாமல் போகலாம்.

**பாதியில் விலக முடியுமா?:**

இதற்கு வாய்ப்புகள் குறைவு. அப்படியே விலக வேண்டுமானால் வங்கி முதலில் அதற்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு கடன் பெற்ற நபர் உங்களுக்கு பதிலாக வேறு ஒரு கேரண்டி கையெழுத்து போடுபவரை வங்கிக்கு வழங்க வேண்டும். அப்பொழுதும் உங்களை விடுவிக்க வேண்டுமா? வேண்டாமா? என்பது வங்கியை பொறுத்தது. எனவே ஜாமீன் கையெழுத்து போடுவதற்கு முன்பு உண்மையிலேயே லோன் பெறுபவர் அந்த கடனை திருப்பிச் செலுத்த தகுதியுடையவரா என்பதை சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

அதேபோல நீங்கள் கையெழுத்து போடுவதற்கு முன்பு வங்கிகள் வழங்கும் அக்ரிமெண்டை சரியாக படித்துக் கொள்ளுங்கள். லோன் தொகை உண்மையிலேயே எவ்வளவு? எத்தனை ஆண்டு காலம் செலுத்த வேண்டும்? எவ்வளவு வட்டி? போன்றவற்றையும் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு வேலை கடன் பெற்றவர் கடனை திருப்பி செலுத்தவில்லை என்றால் அந்த கடனை உங்களால் நிர்வகிக்க முடியுமா? அந்த அளவுக்கு பொருளாதார உங்களிடம் உள்ளதா? என்பதையும் சிந்தியுங்கள். வெறும் பாசம், நட்பு போன்ற விஷயங்களுக்காக உணர்ச்சிவசப்பட்டு கையெழுத்து போட்டால் பிற்காலத்தில் நிதி நெருக்கடியில் சிக்கும் வாய்ப்பு அதிகம்!

# சிவன் பக்தர்களுக்கு ஜாக்பாட்; ஒரே பயணத்தில் 7 ஜோதிர்லிங்க தரிசனம், IRCTC அதிரடி!

புதுடெல்லி, மே. 20–

இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் சுற்றுலா கழகம் (IRCTC), ஜூன் மாதத்தில் 'பாரத் கௌரவ்' சுற்றுலா ரயில் மூலம் ஏழு ஜோதிர்லிங்கங்கள் மற்றும் தென் இந்தியாவை உள்ளடக்கிய சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளது. இந்த இரண்டு சுற்றுலாக்களுக்கான தொகுப்புகளையும் IRCTC =அறிமுகப்படுத்தியது. இந்த இரண்டு தொகுப்புகளிலும், EMI மற்றும் LTC வசதிகள் வாயிலாகப் பயணம் செய்யும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது.

வருகிற ஜூன் 12 முதல் ஜூன் 23 வரை ஏழு ஜோதிர்லிங்க யாத்திரை நடைபெறும் என்று முதன்மை மண்டல மேலாளர் அஜித்




குமார் சின்ஹா அறிவித்தார். இந்த சுற்றுப்பயணத்தில் மஹாகாலேஷ்வர் ஜோதிர்லிங்கம் Mahakaleshwar (Ujjain, Madhya Pradesh), ஓம்காரேஷ்வர் ஜோதிர்லிங்கம் (உஜ்ஜைன்) Omkareshwar (Madhya Pradesh), துவாரகாதீஷ் Dwark–adhish Temple, பேட் துவாரகை (Beyt Dwarka), நாகேஸ்வரர் ஜோதிர்லிங்கம் Nageshwar (Gujarat), சிக்னேச்சர் பாலம் (Signature Bridge), சோம்நாத் ஜோதிர்லிங்கம் (குஜராத்) Somnath (Gujarat), திரிம்பகேஷ்வர் ஜோதிர்லிங்கம் Trimbakeshwar (Maharash–tra), பஞ்சவடி (Panchavati), காலாராம் கோயில் Kalaram Temple Nashik, பீமாசங்கர் ஜோதிர்லிங்கம் (குஜராத்) Bhimashankar (Maharashtra), கிரிஸ்னேஸ்வரர் கோயில் (சத்திரபதி சம்பாஜிநகர்) Ghrishneshwar Temple ஆகிய கோவில்களுக்கு தரிசனத்திற்காக அழைத்துச் செல்லப்படுவீர்கள்.

**பயணக் காலம் ஜூன் 12, 2026 முதல் ஜூன் 23, 2026 வரை (12 நாட்கள்)**

முக்கிய இடங்கள் மகாகாலேஷ்வர், ஓம்காரேஷ்வர், துவாரகாதீஷ், நாகேஸ்வரர், சோம்நாத், திரிம்பகேஷ்வர், பீமாசங்கர், கிரிஸ்னேஸ்வரர் மற்றும் நாசிக் (பஞ்சவடி)

ரயில் ஏறும் இடங்கள் ரிஷிகேஷ், ஹரித்வார், மொராதாபாத், பரேலி, லக்னோ, கான்பூர் மற்றும் இதர முக்கிய நிலையங்கள்

கட்டணம் (நபர் ஒருவருக்கு) Economy: ₹24,100

Standard: ₹40,890

Comfort: ₹54,390

**ஜோதிர்லிங்க ரயில் யாத்திரை: ரயில் ஏறும் நிலையங்கள் /கட்டண விவரங்கள்**

இந்த ரயில் பயணம் பின்வரும் நிலையங்களிலிருந்து தொடங்கும்: யோக் நகரி ரிஷிகேஷ், ஹரித்வார், மொராதாபாத், பரேலி, ஷாஜகான்பூர், ஹர்தோய், லக்னோ, கான்பூர், ஒரை, வீரங்கனா லட்சுமிபாய் மற்றும் லலித்பூர். 'எகானமி' பிரிவிற்கான (ஸ்லீப்பர் வகுப்பு) பயண தொகுப்பு கட்டணம் ஒரு நபருக்கு ₹24,100 ஆகும்; 'ஸ்டாண்டர்ட்' பிரிவிற்கு (AC 3–Tier) ஒரு நபருக்கு கட்டணமாக ₹40,890 வசூலிக்கப்படும்; மற்றும் 'கம்ஃபோர்ட்' பிரிவிற்கு (AC 2–Tier) ஒரு பயணியின் கட்டணம் ₹54,390 ஆகும்.

**ஜூன் 29 முதல் தென்னிந்திய ஆன்மீகச் சுற்றுலா:**

அதேபோன்று, தென் இந்தியச் சுற்றுலா ஜூன் 29 முதல் ஜூலை 10 வரை நடைபெறும். இச்சுற்றுலாவில் முக்கியமாகத் திருப்பதி ஏழுமலையான் கோவில், ராமநாதசுவாமி கோவில், மதுரை மீனாட்சியம்மன் கோவில், கன்னியாகுமரியில் உள்ள உள்ளூர் சுற்றுலாத் தலங்கள் மற்றும் மல்லிகார்ஜுன ஜோதிர்லிங்க கோவில் Mal–likarjuna (Andhra Pradesh) ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள். இச்சுற்றுலாவிற்கான கட்டணம், ஸ்லீப்பர் வகுப்பிற்கு ₹24,350, AC 3–Tier வகுப்பிற்கு ₹41,800 மற்றும் AC 2–Tier வகுப்பிற்கு ₹55,750 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**முன்பதிவு மற்றும் உதவி எண்கள்:**

இந்தத் தொகுப்பிற்கான முன்பதிவுகளை, கோமதி நகரில் அமைந்துள்ள சுற்றுலா பவனில் உள்ள IRCTC அலுவலகத்திலும், www.irctctourism.com என்ற இணையதளம் வாயிலாகவும், அல்லது 9236391908 மற்றும் 8287930908 ஆகிய உதவி எண்கள் மூலமாகவும் மேற்கொள்ளலாம்.

# 8-வது ஊதியக்குழு அமலாக்கம், சம்பள உயர்வு 2027-ல் தான்?

புதுடெல்லி, மே. 20–




மத்திய அரசு ஊழியர்களும் ஓய்வூதியதாரர்களும் 8வது ஊதியக் குழுவின் அமலாக்கத்திற்காக ஆவலுடன் காத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் அதிர்ச்சிகரமான செய்தி ஒன்று வந்துள்ளது. 8வது ஊதியக் குழு உடனடியாக அமல்படுத்தப்பட வாய்ப்பில்லை என கூறப்படுகின்றது.

புதிய ஊதியக் கட்டமைப்பு ஜனவரி 1, 2026 முதல் நடைமுறைக்கு வந்தாலும், திருத்தப்பட்ட ஊதியங்கள் 2027–ஆம் ஆண்டில்தான் வழங்கப்படக்கூடும்

ஊதியக் கட்டமைப்புகள், படிகள் மற்றும் ஓய்வூதியங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து, தனது இறுதிப் பரிந்துரைகளை மத்திய அரசிடம் சமர்ப்பிக்க ஊதியக் குழுவிற்குத் தேவைப்படும் கால அவகாசமே இந்தத் தாமதத்திற்குக் காரணமாகும்.

மத்திய அமைச்சரவை ஜனவரி 2025 –இல் 8வது ஊதியக் குழுவிற்கு ஒப்புதல் அளித்தது. அதைத் தொடர்ந்து, இக்குழு அமைக்கப்பட்டதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியிடப்பட்டது. முந்தைய ஊதியக் குழுக்களைப் போலவே, இம்முறையும் கலந்தாய்வுகளை நிறைவு செய்து, தனது அறிக்கையைத் தயாரிப்பதற்கு இக்குழுவிற்கு சுமார் 18 மாத கால அவகாசத்தை அரசு வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி, ஊதியக் குழுவின் பரிந்துரைகள் 2027–ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்படலாம். அதன் பிறகு, அரசு அப்பரிந்துரைகளை ஆய்வு செய்து, திருத்தப்பட்ட ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை இறுதி செய்து அமல்படுத்துவது குறித்த அறிவிப்பை வெளியிடும்.

எனினும், ஊழியர்கள் நிலுவைத் தொகையின் (Arrears) மூலம் பயனடைய வாய்ப்புள்ளது. புதிய ஊதியத் திருத்தம் ஜனவரி 1, 2026 முதல் நடைமுறைக்கு வரும் என்றே எதிர்பார்க்கப்படுவதால், அதை அமல்படுத்துவதில் ஏற்படும் தாமதத்தின் காரணமாக, தகுதியுள்ள ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகையானது பின்னேற்பு முறையில் (retrospectively) வழங்கப்படும்.

8–வது ஊதியக் குழு தொடர்பான விவாதங்களில் ஃபிட்மெண்ட் ஃபாக்டர் என்பதே மிக முக்கியமான பேசுபொருளாக உருவெடுத்துள்ளது. மத்திய அரசு ஊழியர்களின் அடிப்படை ஊதியத்தைத் திருத்தம் செய்வதற்கு இந்தச் சூத்திரமே பயன்படுத்தப்படுகிறது. 7–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி, ஃபிட்மெண்ட் ஃபாக்டர் 2.57 என நிர்ணயிக்கப்பட்டது. இதன் விளைவாக, குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் ரூ. 18,000–ஆக உயர்ந்தது. இம்முறையோ, ஃபிட்மெண்ட் ஃபாக்டரை 3.68 முதல் 3.83 –க்குள் நிர்ணயிக்க வேண்டும் என்று ஊழியர் சங்கங்கள் வலியுறுத்தி வருகின்றன.

ஊழியர் சங்கங்களின் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அரசு இறுதி செய்யும் சூத்திரத்தைப் பொறுத்து, குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் கணிசமான அளவில் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதன்படி, குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் ரூ. 51,000 முதல் ரூ. 69,000 வரையிலான வரம்பில் அமையக்கூடும் என்று மதிப்பிடப்படுகிறது. எனினும், இதுவரை எந்தவொரு அதிகாரப்பூர்வமான எண்ணிக்கையும் இறுதி செய்யப்படவில்லை.


பின்வரும் முக்கியக் கூறுகளை இந்தக் குழு மறுஆய்வு செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது: அகவிலைப்படி (DA), வீட்டு வாடகைப்படி (HRA), போக்குவரத்துப்படி, ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திருத்தங்கள். இந்த பரிந்துரைகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தால், 2025 டிசம்பர் 31 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களும் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழ்நாட்டில் இதுவரை மூடப்பட்ட மதுக்கடைகள் எத்தனை...?


சென்னை,

தமிழக முதல்–அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய், கடந்த 12–ந் தேதி டாஸ்மாக் அதிகாரிகளுக்கு உத்தரவு ஒன்றை பிறப்பித்தார். அதாவது, வழிபாட்டு தலங்கள், கல்வி நிறுவனங்கள், பஸ் நிலையங்கள் அருகில் இருந்து 500 மீட்டர் தொலைவுக்குள் அமைந்துள்ள டாஸ்மாக் மதுக்கடைகளை மூட வேண்டும் என்ற உத்தரவுதான் அது.

அதன்படி, மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் 717 மதுக்கடைகள் இருப்பது கண்டறியப்பட்டது. இந்தக் கடைகளை 2 வார காலத்திற்குள் மூட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில், நேற்று வரை 513 மதுக்கடைகள் தமிழகத்தில் மூடப்பட்டுள்ளன. இன்னும் 204 மதுக்கடைகள் மூடப்பட வேண்டும். இந்தக் கடைகளும் இந்த வார இறுதிக்குள் மூடப்படும் என டாஸ்மாக் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.



# நீங்கள் எந்த வயதில் கோடீஸ்வரர் ஆவீர்கள்!




ஜோதிடத்தில் வகைகள் உண்டு. அனைத்து நோக்கம் அவருடைய வாழ்க்கை மற்றும் அவருடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை சரியாக கணிப்பதாகவே இருக்கும். அந்த விதத்தில் எண் கணிதத்தின்படி, ஒருவருடைய வாழ்க்கை எப்படி இருக்கும், அவருடைய பிறந்த தேதியின் அடிப்படையில் அவருக்கு எந்த வயதில் செல்வம் சேரும், எந்த காலகட்டம் மிகவும் சிறப்பானதாகவும், பெரிய அளவில் உரியை அடைவார்கள், கோடீஸ்வரன் ஆகக்கூடிய அதிக வாய்ப்புகள் எப்போது பெறுவார்கள் என்பதை இங்கு பார்ப்போம்.

**எண் 1 ல் பிறந்தவர்கள்**

உங்களுடைய பிறந்த தேதி ஏதேனும் ஒரு மாதத்தில் 1, 10, 19 அல்லது 28 ஆகிய தேதியாக அமைந்திருந்தால், எடுத்துக்காட்டாக 19ம் தேதியில் பிறந்திருப்பின் 1+9= 10, 1+0=1. இவருடைய உடல் எண் 1.

சூரியனின் ஆதிக்கம் கொண்ட எண் 1 கொண்டவர்கள் தங்களுடைய வேலை மற்றும் வாழ்க்கையில் வெற்றி அடைய புதிய வழிகளை காண்பார்கள். அளவற்ற செல்வத்தை பெறக்கூடியவர்களாக இருப்பார்கள். இவர்கள் தங்களுடைய 22 ஆவது வயது முதல் மிகவும் சிறப்பான காலமாக அமையும்.

**எண் 2 ல் பிறந்தவர்கள்**

ஏதேனும் ஒரு மாதத்தில் 2, 11, 20 மற்றும் 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் அவர்களுடைய உடல் எண் 2 ஆகும். இந்த எண் சந்திரனின் ஆதிக்கம் நிறைந்ததாக இருக்கும். இவர்கள் தங்களுடைய 24 வது வயது மிகவும் மங்களகரமானதாக அமையும். இந்த வயதில் இவர்கள் எடுக்க கூடிய எந்த ஒரு முன்னெடுப்பும் நல்ல பலனை தரும். அதனால் இவர்கள் செய்யக்கூடிய தொழில் மற்றும் பொருளாதார நிலை பெரிய அளவில் முன்னேற்றத்தை காணலாம். இதனால் இந்த வயதிலிருந்து இவர்களுடைய வங்கி கையிருப்பு கணிசமாக உயரும்.

**எண் 3 ல் பிறந்தவர்கள்**

எந்த மாதத்திலும் 3, 12, 21 அல்லது 30 ஆகிய தேதிகளில் நீங்கள் பிறந்திருந்தால், உங்கள் உடல் எண் (பிறந்த எண்) 3 ஆகும். குருவின் ஆதிக்கம் எண் 3–ஐக் கொண்ட நபர்களுக்கு அவர்களுடைய 32–வது வயது மிகவும் அதிர்ஷ்டம் தரக்கூடியதாக இருக்கும். இவர்கள் 32–வது வயதில், தங்களுடைய கடுமையான உழைப்பிற்கான முழு பாலனை அடைவார்கள். இது அவர்களின் வாழ்க்கை மற்றும் பொருளாதார நிலையில் பலமடைய செய்யும். அதிக அளவில் சம்பாதிக்கக்கூடிய யோகமும் அவர்களுக்கு அமையும்.

**எண் 4 ல் பிறந்தவர்கள்**

ஏதேனும் ஒரு மாதத்தில் 4, 13, 22 அல்லது 31 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் அவர்களுடைய பிறந்த எண் 4 என கணக்கிடப்படுகிறது. ராகுவின் ஆதிக்கமான எண் 4ல் பிறந்தவர்கள் தங்களுடைய 36 மற்றும் 42வது வயதில் அவர்களுக்கு மிகவும் மங்களகரமான பலன்கள் அடைவார்கள். இந்த காலகட்டத்தில் இவர்களுக்கு புதிய வியாபாரம் அல்லது தொழில அமையும். இவருடைய பொருளாதாரம் முன்னேற்றுவதற்கான பல்வேறு வாய்ப்புகள் தேடிவரும். சொத்து சம்பந்தமான கூடுதல் நன்மைகள் பெறுவார்கள்.

**எண் 5 ல் பிறந்தவர்கள்**

எந்த மாதத்திலும் 5, 14 அல்லது 23 ஆகிய தேதி ஒன்றில் நீங்கள் பிறந்திருந்தால், உங்களுடைய உடல் எண் 5 ஆகும். புதன் பகவானின் ஆதிக்கம் நிறைந்த 5ம் எண்ணில் பிறந்த நபர்களுக்கு தங்களுடைய 32 வது வயது மிகவும் அதிர்ஷ்டத்தையும், பிறருடைய முழுமையான ஆதரவையும் பெறுவார்கள். இந்த காலகட்டத்தில் திடீரென பொருளாதார ஆதாயம் உயரும் வாய்ப்புகள் ஏற்படும்.

**எண் 6 ல் பிறந்தவர்கள்**

ஒரு நபர் ஏதேனும் ஒரு மாதத்தில் 6, 15 மற்றும் 24 ஆகிய தேதிகளில் பிறந்தவராக இருப்பின் அவருடைய உடல் எண் 6 ஆகும்.

சுக்கிரனின் ஆதிக்கம் கொண்டிருக்கக்கூடிய எண் 6ல் பிறந்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் 25 ஆம் வயதில் எதிர்பாராத பெரிய வெற்றியை அடைவார்கள். மேலும் அவர்களுடைய வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் காணும் வாய்ப்புகள் உருவாகும். உங்களுடைய வாழ்க்கையில் அற்புதமான வாய்ப்புகள், வசதிகளும் சேரும். குடும்ப வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என அனைத்தும் மகிழ்ச்சி மற்றும் செழிப்பு நிறைந்திருக்கும்.

**எண் 7 ல் பிறந்தவர்கள்**

ஒரு நபர் ஏதேனும் ஒரு மாதத்தில் 7, 16 மற்றும் 25 ஆகிய தேதிகளில் பிறந்திருப்பின் அவருடைய பிறந்தவர்களின் பிறந்த எண் 7 ஆகும். கேதுவின் ஆதிக்கம் கொண்ட எண் 7–ஐக் கொண்டவர்களுக்கு தங்களுடைய 34–வது மற்றும் 38–வது வயதில் மிகவும் அதிர்ஷ்டம் நிறைந்ததாகவும், சுபமானவையாக அமையும். இந்த காலகட்டத்தில் இவர்களுடைய நிதி நிலைமை பெரிய அளவில் முன்னேற்றம் அடையும். இந்த வயதுகளில் தாங்கள் செய்யக்கூடிய வேலை, வியாபாரம், தொழிலில் அதிகமான முயற்சியில் ஈடுபட்டால் முன்னேற்றம் உண்டாகும்.

**எண் 8 ல் பிறந்தவர்கள்**

ஒரு நபர் ஏதேனும் ஒரு மாதத்தில் 8, 17 மற்றும் 26 ஆகிய தேதிகளில் பிறந்தவராக இருப்பின் அவர்களுடைய உடல் எண் 8 ஆகும்.

சனி பகவானின் ஆதிக்கம் கொண்ட எண் 8–ஐக் கொண்டவர்களுக்கு, அவர்களின் 36 மற்றும் 42 ஆகிய வயதுகள் மிகவும் அதிர்ஷ்டமான மற்றும் சிறப்பான பலன்களை பெறுவார்கள். இந்த காலகட்டத்தில் இருக்கக்கூடிய எந்த ஒரு முயற்சி மற்றும் இவர்கள் செய்யக்கூடிய மாற்றங்கள் நல்ல பலனை தரும். மேலும் அதிர்ஷ்டத்தின் முழு ஆதரவு இவர்களுக்கு கிடைக்கும். சிலருக்கு சொத்து சேரும்.

**எண் 9 ல் பிறந்தவர்கள்**

ஒரு நபர் ஏதேனும் ஒரு மாதத்தில் 9, 18 மற்றும் 27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் அந்த நபருடைய உடல் எண் 9 ஆகும்.

செவ்வாய் பகவானின் ஆதிக்கம் நிறைந்த எண் 9ல் பிறந்த நபர்கள் தங்களுடைய 28 வது வயது மிகவும் சிறப்பான முன்னேற்றத்தை தரக்கூடியதாக அமையும். குறிப்பாக அவர்களுடைய சொல் மற்றும் செயல்பாடுகளால் மரியாதை, புகழ், வெற்றிய என அனைத்தையும் பெறுவார்கள்.

# பெங்களூரு - சுவிட்சர்லாந்து இடையே நேரடி விமான சேவை!

பெங்களூரு, மே. 20–

பெங்களூரு அருகே தேவனஹள்ளியில் உள்ள கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஏராளமான நாடுகளுக்கு நேரடி விமான சேவை உள்ளது. இருப்பினும் சுவிட்சர்லாந்து உள்ளிட்ட சில நாடுகளுக்கு இதுவரையில் நேரடி விமான சேவை இல்லை. இணைப்பு விமான சேவை தான் இருந்து வந்தது. இதனால் பெங்களூருவில் இருந்து சுவிட்சர்லாந்துக்கு நேரடி விமானம் இயக்கப்பட வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். அதன்படி பெங்களூருவில் இருந்து சுவிட்சர்லாந்துக்கு நேரடி விமான சேவை தொடங்கப்பட உள்ளது. இந்த விமான சேவை வருகிற அக்டோபர் மாதம் முதல் செயல்பட இருக்கிறது.

வாரத்தில் 5 நாட்களுக்கு பெங்களூரு –சுவிட்சர்லாந்து இடையே நேரடி விமானங்கள் இயக்கப்பட திட்டமிடப்பட்டு உள்ளது. இதன்மூலம் பெங்களூரு சுவிட்சர்லாந்து இடையேயான தொழில் வர்த்தகம், தகவல் தொழில்நுட்ப துறை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற் றம் ஏற்படும் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மதுரை மண்டலம்**

**செட்டியார்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி**

**விருதுநகர் மாவட்டம்.**

தூய்மை இந்தியா இயக்கம் 2.0

அறிவிப்பு

ந.க.எண். 62/2026 நாள்: 19.05.26

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி செட்டியார்பட்டி தேர்வுநிலை பேரூராட்சியை திறந்தவெளி கழிப்பிடமற்ற Open Defecation Free plus Town (ODF+) பேரூராட்சியாக அறிவித்திட செட்டியார்பட்டி பேரூராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. செட்டியார்பட்டி பேரூராட்சியை திறந்தவெளி கழிப்பிடமற்ற Open Defecation Free plus Town (ODF+) பேரூராட்சியாக அறிவித்திட தங்கள் மேலான கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் செயல் அலுவலர், செட்டியார்பட்டி பேரூராட்சி, விருதுநகர் – 626122 என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது vnrchettiyarpatti@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 29.05.2026 மாலை 6.00 மணிக்குள் தெரிவிக்கலாம் என இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**செயல் அலுவலர்,**
செட்டியார்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

வெ.ஆ.எண்: 36/ செ.ம.தொ.அ./
விருதுநகர் நாள்: 19.05.2026

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# இந்த உணவுகளை சாப்பிட்டால் அவ்வளவு தான்..!



சிப்ஸ், பாக்கெட் சிற்றுண்டிகள், உடனடி நூடுல்ஸ், பர்கர்கள், பீஸ்ஸா மற்றும் இனிப்புகள் போன்ற அதிகப்படியாகப் பதப்படுத்தப்பட்ட உணவுகளை அதிகம் உட்கொள்ளும் குழந்தைகளுக்கு, ஆஸ்துமா உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படும் அபாயம் அதிகம் என்று சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதிகப்படியாகப் பதப்படுத்தப்பட்ட உணவுகள் ஏன் ஆபத்தானவை என்பதையும், அவற்றுக்கும் ஆஸ்துமாவுக்கும் இடையிலான தொடர்பு என்ன என்பதையும் இப்போது தெரிந்துகொள்வோம்..

**அதிகப்படியாகப் பதப்படுத்தப்பட்ட உணவுகள் ஏன் ஆபத்தானவை?**

அதிகப்படியாகப் பதப்படுத்தப்பட்ட உணவுகள் வயிற்றின் ஆரோக்கியத்தைப் பாதிப்பது மட்டுமல்லாமல், உடலின் 'குடல் நுண்ணுயிரிகள்' (gut microbiome) மீதும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது நோய் எதிர்ப்பு மண்டலத்தைப் பலவீனப்படுத்துவதுடன், உடலில் 'ஆக்சிஜனேற்ற அழுத்தத்தை' (oxidative stress) அதிகரிக்கிறது. இந்தத் தாக்கம் நுரையீரல்களைப் பாதித்து, ஆஸ்துமா ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கக்கூடும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வகை உணவுகளில் அதிக அளவில் ரசாயனங்கள், பதப்படுத்திகள், செயற்கை சுவையூட்டிகள் மற்றும் பிற பொருட்கள் கலந்திருக்கின்றன. இவை குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்துபவை ஆகும். நீண்ட கால அடிப்படையில், வயிறு சார்ந்த பிரச்சினைகள், செரிமானக் கோளாறுகள் மற்றும் புற்றுநோய் ஏற்படும் அபாயம் கூட இருக்கக்கூடும் என்று இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

**குழந்தைகளின் உணவுப் பழக்கவழக்கங்களில் என்ன மாற்றங்கள் தேவை..?**

சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, குழந்தைகளுக்குப் புதிய பழங்கள், காய்கறிகள், வீட்டில் சமைத்த உணவுகள், பருப்பு வகைகள், பால் மற்றும் புரதம் நிறைந்த உணவுகளை வழங்குவதே சிறந்தது.

மேலும், முழு தானியங்களை கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகளையும், சர்க்கரைச் சத்து குறைவாக உள்ள உணவுகளையும் உண்ணுமாறு அவர்களை ஊக்குவிக்க வேண்டும். குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க, பாக்கெட் உணவுகள் மற்றும் துரித உணவுகளின் (junk food) நுகர்வைக் குறைப்பது மிகவும் அவசியம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

## சினிமா துளிகள்..!

# அதிரடியாக வெளியான பெத்தி ட்ரைலர்! ரிலீஸ் தேதி எப்போது தெரியுமா?




ராம் சரண் நடிப்பில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள பான்–இந்தியா திரைப்படமான "பெத்தி", வெளியீட்டுக்கு முன்பே நாடு முழுவதும் பரபரப்பை கிளப்பி வருகிறது. இயக்குநர் புச்சி பாபு சனா, கிராமத்து பின்னணியுடனான இந்த ஆக்ஷன்ஸ்போர்ட்ஸ் கதையை மண் வாசனை மிக்க உணர்வுகளுடன் உருவாக்கியுள்ளார். ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர்கள், கதாபாத்திர அறிமுகங்கள், மற்றும் மனதை கவரும் பாடல்கள் ஆகியவை ரசிகர்களின் எதிர்பார்ப்பை மேலும் உயர்த்தியுள்ளன. வெங்கட சதீஷ் கிலாரு தயாரிப்பில், விருத்தி சினிமாஸ் நிறுவனம் மைத்ரி மூவி மேக்கர்ஸ் மற்றும் சுகுமார் ரைட்டிங்ஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்தின் திரையரங்க டிரெய்லர், மும்பையில் நடைபெற்ற விழாவில் வெளியிடப்பட்டது.

இன்னும் சில வாரங்களில் வெளியாக இருக்கும் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு தற்போது உச்சத்தை எட்டியுள்ளது.

# சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 19 புதிய நீதிபதிகள்..! கொலிஜியம் ஒப்புதல்!!




சென்னை, மே. 20–

சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 19 பேரை நீதிபதிகளாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலிஜியம் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு மத்தியஅரசு ஒப்புதல் வழங்கியதும், அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகும்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக 9 நீதித்துறை அதிகாரிகளையும், 10 வழக்கறிஞர்களையும் உச்ச நீதிமன்ற கொலீஜியம் அங்கீகரித்தது. தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான இந்தக் கொலீஜியம், மே 18 அன்று நடைபெற்ற கூட்டத்தில், இவர்களை நீதிபதிகளாக நியமிப்பதற்கான பெயர்களுக்கு ஒப்புதல் அளித்தது.

அடுத்தக்கட்டமாக, இவர்களின் நியமனத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும்பட்சத்தில், குடியரசு தலைவர் புதிய நீதிபதிகள் நியமனம் குறித்த உத்தரவை பிறப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரிந்துரைக்கப்பட்ட 19 பேர் பட்டியல்

1. பி. முருகன்
2. எம்.டி. சுமதி
3. எஸ். அல்லி
4. திருமகள் சந்திரசேகர்
5. தர்மலிங்கம் லிங்கேஸ்வரன்
6. கார்த்திகேயன் பாலதண்டாயுதம்
7. நடராஜன் ரமேஷ்
8. ஜி. கே. முத்துக்குமார்
9. ராமகிருஷ்ணன் ராஜேஷ் விவேகானந்தன்
10. சங்கரநாராயணன் ரவிக்குமார்
11. நாகராஜன் திலீப்குமார்
12. எல்லப்பன் மனோகரன்
13. கிருஷ்ணசுவாமி கோவிந்தராஜன்
14. ரஜ்னிஷ் பதியில்
15. அப்பாதுரை (எ) கந்தவேல் அப்பாதுரை
16. ராமசாமி அனிதா
17. சண்முகம் கார்த்திகேயன்
18. பாலுச்சாமி முருகேசன்
19. என். குணசேகரன்'

எல்ஐசி முதலீட்டாளர்களுக்கு ஜாக்பாட்? மே 21–ல் வெளியாகப்போகும் அந்த முக்கிய அறிவிப்பு?

எல்ஐசி (LIC) நிறுவனம் தனது நான்காம் காலாண்டு (Q4) நிதிநிலை முடிவுகளை வரும் மே 21–ம் தேதி அறிவிக்க உள்ளது. இந்த நிதிநிலை முடிவுகளுடன் சேர்த்து, முதலீட்டாளர்களுக்கு டிவிடெண்ட் (Divi–dend) குறித்த அறிவிப்பும் வெளியாகும் எனப் பலரும் ஆவலுடன் காத்திருக்கின்றனர். இந்த முக்கியக் கூட்டத்தில், பாலிசிதாரர்களுக்கான போனஸ் எப்போது வழங்கப்படும் என்பது குறித்த விவரங்களும் விரிவாகத் தெரிவிக்கப்படும். பொதுவாக, பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் டிவிடெண்ட் மற்றும் பாலிசிதாரர்களுக்குக் கிடைக்கும் போனஸ் ஆகிய இரண்டிற்கும் இடையே பலருக்குக் குழப்பம் ஏற்படுவதுண்டு. இந்தியா முழுவதும் எல்ஐசி அடைந்துள்ள வளர்ச்சியை இந்த முடிவுகள் பிரதிபலிக்கும் என்பதால், கோடிக்கணக்கான இந்தியக் குடும்பங்கள் இந்த அறிவிப்பை உற்றுநோக்கி வருகின்றன.

# குடும்ப தலைவிகளுக்கு ரூ.2,500 வங்கி கணக்கில் வரவு வைப்பு!



புதுச்சேரி, மே. 20–

புதுவை மாநிலத்தில் 2021ல் பொறுப்பேற்ற தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்ப தலைவிகளுக்கு ரூ. 1000ம் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியது.


இந்த உதவித்தொகை தேர்தல் நெருக்கத்தில் ரூ.2 ஆயிரத்து 500 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டது. தேர்தலுக்கு முன்பாக பிப்ரவரி, மார்ச் ஆகிய 2 மாத உதவித்தொகையாக ரூ.5 ஆயிரம் குடும்ப தலைவிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. முதல்–அமைச்சராக ரங்கசாமி கடந்த 13–ந்தேதி பதவியேற்றார். அவர் பதவியேற்ற பின் ஏற்கனவே உயர்த்திய குடும்ப தலைவிகளுக்கான உதவித் தொகை ரூ. 2 ஆயிரத்து 500 வழங்க நடவடிக்கை எடுத்தார்.

அதன்படி சிவப்பு ரேஷன் அட்டை வைத்துள்ள 65 ஆயிரம் குடும்ப தலைவிகளுக்கு வங்கி கணக்கில் நேற்று முதல் இந்த தொகை வரவு வைக்கப்பட்டு வருகிறது. மஞ்சள் ரேஷன்கார்டுகளுக்கு மாதம் ரூ.1000 உதவித்தொகை வழங்கப்படும் என்று முதல்–அமைச்சர் ரங்கசாமி உறுதியளித்திருந்தார்.

இந்த தொகையையும் வழங்க வேண்டும் என பெண்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

# மாநிலங்களுக்கு ரூ.90 ஆயிரம் கோடி வட்டியில்லா கடன்: மத்திய அரசு!




புதுடெல்லி, மே. 20–

மூலதன செலவு கடன் திட்டத்தின் கீழ், மத்திய அரசு ரூ.2 லட்சம் கோடி அளவுக்கு மாநிலங்களுக்கு கடன் வழங்க முடிவு செய்துள்ளது. இதில், 45 சதவீத தொகை, முதல் காலாண்டிலேயே விடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகறது.

இந்த தொகை, அடிப்படை கட்டமைப்புகளுக்கு ஆதாரமான ரெயில்வே, நெடுஞ்சாலைகள், மெட்ரோ ரெயில், குடிநீர் வழங்கல் மற்றும் மின் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்படும்.

2025–26–ம் நிதியாண்டின் இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி நாடு முழுவதும் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டன.

அதாவது, ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரை மாநிலங்களுக்கு ரூ.40 ஆயிரம் கோடி கடன் வழங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில், மத்திய அரசால் ஏற்கனவே ரூ.20 ஆயிரம் கோடி மாநிலங்களுக்கு வட்டியில்லா கடனாக வழங்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இறுதிக்குள் மேலும் ரூ.70 ஆயிரம் கோடி விடுவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழக வெற்றிக் கழக மாநகர்மாவட்ட செயலாளரும், திருப்பூர் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான பாலமுருகன் அவர்கள் முன்னிலையில், அ.தி.மு.க.வின் முன்னாள் கரும்பாளையம் பகுதி கழகச் செயலாளரும் மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலருமான கேபிஜி மகேஸ்வராம் அவர்கள் தலைமையில் அதிமுக திருப்பூர் மாநகர மாவட்ட கழக இணைச் செயலாளரும் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சங்கீதா சந்திரசேகர், அண்ணா பாத்திரதொழிற்சங்க மாவட்டச் செயலாளர் குணசேகரன், அம்மா பேரவை மாவட்ட இணைச் செயலாளர் சந்திரசேகர், கணக்கம்பாளையம் கிளை செயலாளர் ஜான் கென்னடி உள்ளிட்டோர் இன்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துக் கொண்டபோது முன்னாள் திருப்பூர் மேயர் திருமதி .விசாலாட்சி அவர்களும் உடனிருந்தார்

# மனிதநேயம்!



திருப்பூர், மே. 20–

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அடுத்த ஆண்டிபாளையம் பகுதியில் சேர்ந்தவர் நாச்சிமுத்து இவரது மனைவி அன்னபூரணி இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அன்னபூரணி அதே பகுதியில் செயல்பட்டு வரும் பாலி பேக்கிங் தயாரிக்கும் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். கடந்த ஜனவரி மாதம் பணியில் இருந்த போது இயந்திரத்தில் சிக்கி இவரது வலது கை துண்டானது. இதன் காரணமாக பெரும் சிரமத்தில் தவித்து வந்த அன்னபூரணி, கடந்த சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆண்டிபாளையம் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்டிருந்த மத்திய மாவட்ட கழக செயலாளர் திமுக கழக வேட்பாளர் செல்வராஜிடம் தனது நிலையை எடுத்துக் கூறி தனக்கு உதவி செய்ய வேண்டும்என வேண்டுகோள் விடுத்தார். அதற்கு தேர்தல் முடிந்த பின்பு நிச்சயம் செய்வதாக செல்வராஜ் அன்னபூரணிக்கு வாக்குறுதி அளித்தார். இந்த நிலையில் தேர்தலில் செல்வராஜ் தோல்வியுற்றிருந்தாலும், தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் தனது சொந்த செலவில் சுமார் 2 லட்சம் மதிப்புள்ள செயற்கை கை தயாரிக்கப்பட்டு இன்று திருப்பூர் சோலாபுரி அம்மன் கோவிலில் அன்னபூரணிக்கு அந்த கையானது பொருத்தப்பட்டது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881





# வேலை வாய்ப்பு

## ஹச்.ஏ.எல். நிறுவனத்தில் 205 காலியிடங்கள்!

### HAL Recruitment 2026

- Vacancy: 205
- Post Name: Trade Apprentice
- Qualification: ITI
- Selection Process: Merit List, Interview

நிறுவனத்தின் பெயர்: ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL)
அறிவிப்பு எண்: HAL/HD/TRG/2026–27/NAPS/01
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: தொழிற்பயிற்சி
மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 205 ஐடிஐ டிரேட் அப்ரண்டிஸ் பணியிடங்கள்
பணியிட மாற்றம்: ஹைதராபாத்
நேர்காணல் தேதி: 28.05.2026, 29.05.2026 மற்றும் 01.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://hal–india.co.in/

## பாதுகாப்பு சேவைகள் பணியாளர்கள் கல்லூரி, வெல்லிங்டன்; 78 காலியிடங்கள்!

### DSSC Wellington Recruitment 2026

- Vacancy: 78
- Post Name: Group C
- Qualification: 10th, 12th, ITI, Diploma, B.E/B.Tech, B.Sc, BCA
- Selection Process: Written Test, Skill Test / Certificate Verification

நிறுவனத்தின் பெயர்: பாதுகாப்பு சேவைகள் பணியாளர் கல்லூரி, வெலிங்டன்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 78 கீழ்நிலை எழுத்தர், சிவிலியன் மோட்டார் ஓட்டுநர் (சாதாரண தரம்), பல்நோக்கு பணியாளர் (அலுவலகம் & பயிற்சி), சுருக்கெழுத்தாளர் தரம் II, மேற்பார்வையாளர் (நெட்வொர்க்கிங்), நெட்வொர்க் நிர்வாகி, வன்பொருள் நிர்வாகி, லைன்மேன், படகு கட்டுபவர், தொழில்நுட்ப உதவியாளர் – அச்சு இயந்திர இயக்குபவர் ஆகிய பதவிகள்
பணியிடத்தில்: வெலிங்டன் (நீலகிரி)
தொடங்கும் தேதி: 23.05.2026
கடைசி தேதி: 12.06.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.dssc.gov.in/

## காடுகள் ஆராய்ச்சி நிறுவனம்; 91 வேலைவாய்ப்புகள்!

### Forest Research Institute Recruitment 2026

- Vacancy: 91
- Post Name: Forest Guard, Store Keeper, MTS & Clerk
- Qualification: 10th, 12th, ITI, Any Degree
- Selection Process: Written Test, Skill Test/ Interview

நிறுவனத்தின் பெயர்: வன ஆராய்ச்சி நிறுவனம்
அறிவிப்பு எண்: 1/FRI/GC/2026 தேதி: 04/05/2026
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 91 நூலகத் தகவல் உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர் (கள/ஆய்வக ஆராய்ச்சி), சுருக்கெழுத்தாளர் தரம் II, தொழில்நுட்ப வல்லுநர் (கள/ஆய்வக ஆராய்ச்சி), பண்டகக் காப்பாளர், தொழில்நுட்ப வல்லுநர் (பராமரிப்பு), கீழ்நிலை எழுத்தர், வனக் காவலர், பல்நோக்கு பணியாளர் (MTS) பணியிடங்கள்
பணியிடமிருக்கும் இடம்: டேராடூன்
தொடங்கும் தேதி: 04.05.2026 அன்று நள்ளிரவு 12.00 மணி
கடைசி தேதி: 03.06.2026 அன்று இரவு 11.59 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://fridu.edu.in/

## இந்திய விமானப்படை; 47 காலியிடங்கள்!

### Indian Air Force Recruitment 2026

- Vacancy: 47
- Post Name: LDC, Hindi Typist, Driver (Ordinary Grade)
- Qualification: 10th, 12th
- Selection Process: Written Test, Skill Test/ Practical/ Physical Test

நிறுவனத்தின் பெயர்: இந்திய விமானப்படை
அறிவிப்பு எண்: 01/2026
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 47 கீழ்நிலை எழுத்தர் (LDC), இந்தி தட்டச்சு செய்பவர், சிவிலியன் மெக்கானிக்கல் டிரான்ஸ்போர்ட் டிரைவர் (சாதாரண தரம்) பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 02.05.2026
கடைசி தேதி: 31.05.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://indianairforce.nic.in/

## இந்திய இராணுவ வேலைவாய்ப்புகள்!

### Indian Army Recruitment 2026

- Vacancy: 90
- Post Name: Technical Entry Scheme (TES-56) Jan 2027
- Qualification: 12th + Appeared in JEE (Mains) 2026
- Selection Process: Short Listing, SSB Interview

நிறுவனத்தின் பெயர்: இந்திய ராணுவம்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை: 90 10+2 தொழில்நுட்ப நுழைவுத் திட்டம் (TES–56) ஜனவரி 2027 பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 13.05.2026 அன்று 12:00 மணி
கடைசி தேதி: 12.06.2026 அன்று 12:00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://joinindianarmy.nic.in/

# தவெக அமைச்சரவையில் விசிக, முஸ்லிம் லீக்!



சென்னை, மே. 20–

'அமைச்சரவையில் பங்குபெற விசிக மற்றும் முஸ்லிம் லீக்கிற்கு அழைப்பு விடுக்கிறோம். இது தான் எங்கள் முதல்வரின் விருப்பம்,' என்று அமைச்சர் ஆதவ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது; அமைச்சரவை விரிவாக்கம் குறித்த முதல்வர் விரைவில் வெளியிடுவார். அதில், சமூக நீதிகளின் அடிப்படையில் இயங்கக் கூடிய தலைவர்களும், கட்சிகளும் அமைச்சரவையில் இணைய வேண்டும். குறிப்பாக, காங்கிரஸ் கட்சி, முதல்வர் மீது நம்பிக்கை வைத்து மிகப்பெரிய ஆதரவு கொடுத்தது. அவர்கள் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்று முதல்வர் வலியுறுத்தியுள்ளார்.

அதேபோல, இடதுசாரி கட்சிகள் வெளியில் இருந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்ற அவர்களின் கொள்கை முடிவை நாங்கள் எப்போதும் மதிப்போம். இந்த அரசு எப்போதும், சமூக நீதிக்கான அரசாக இருக்கும். மதச்சார்பற்ற கொள்கையில் உறுதியாக இருப்போம். அயோத்தி தாசரின் மண்டபத்தின் முன்பு நின்று இதனை உறுதியாகவும், சத்தியமாகவும் சொல்கிறோம். அதேபோல, அமைச்சரவையில் பங்குபெற விசிக தலைவர் திருமாவளவன் மற்றும் முஸ்லிம் லீக்கிற்கு அழைப்பு விடுக்கிறோம். இது தான் எங்கள் முதல்வரின் விருப்பம். இஸ்லாமிய சகோதரர்களும் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்பதை நாங்கள் அந்த தலைவர்களிடமும் வலியுறுத்தியுள்ளோம்.

இவ்வாறு ஆதவ் கூறினார்.

# கச்சா எண்ணெய் விலை அதலபாதாளத்திற்குச் சரிய போகிறது: அதிபர் டிரம்ப்!



வாஷிங்டன், மே. 20–

நாங்கள் மேற்காசிய போரை மிக விரைவில் முடிவுக்கு கொண்டு வர போகிறோம்; கச்சா எண்ணெய் விலை அதலபாதாளத்திற்குச் சரிய போகிறது என அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நிருபர்களிடம் அதிபர் டிரம்ப் கூறியதாவது:

நாங்கள் போரை மிக விரைவாக முடிவுக்குக் கொண்டு வரப் போகிறோம். அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த தீவிரத்துடன் உள்ளனர். கச்சா எண்ணெய் விலைகள் அதலபாதாளத்திற்குச் சரிவதை நீங்கள் காணப்போகிறீர்கள். அவை நிச்சயம் குறையப் போகின்றன. அங்கு மிக அதிக அளவில் கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளது; எனவே, அவற்றின் விலைகள் கடுமையாக சரியும்.

**ஈரான் மீது தாக்குதல் நடத்துவதா?**

வேண்டாமா என்று முடிவெடுப்பதற்கு ஒரு மணி நேரம் மட்டுமே இருந்தது. நாங்கள் அனைவரும் தயாராக இருந்தோம்.

ஆனால் சில நாட்டு தலைவர்கள் போரை நிறுத்துமாறு கேட்டு கொண்டதால் தற்போது தாக்குதலை ஒத்திவைத்து உள்ளேன்.

ஈரான் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ள நான் ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் அளிக்கிறேன். ஏனென்றால் அவர்கள் அணு ஆயுதம் வைத்திருப்பதை நாங்கள் அனுமதிக்க முடியாது. ஈரான் அணு ஆயுதங்கள் வைத்து இருந்தால் இஸ்ரேலைத் தகர்த்துவிடுவார்கள். இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார்.

# கேரளத்தில் அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணம்: தனியார் பஸ் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்பு!



திருவனந்தபுரம், மே. 20–

கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்தால் அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவசமாக பயணம் செய்யலாம் என்று தேர்தல் வாக்குறுதியில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி நடந்து முடிந்த தேர்தலில் காங்கிரஸ் அதிக இடங்களை பிடித்து வெற்றிபெற்றது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் வி.டி.சதீசன் தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்ற பின்னர் நடைபெற்ற முதல் மந்திரி சபை கூட்டத்திலேயே அரசு பஸ்ககளில் பெண்கள் இலவச பயணத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஜூன் மாதம் 15–ந் தேதிக்கு பின் இந்த திட்டம் அமலுக்கு வர இருக்கிறது. இந்த திட்டம் குறித்த மற்ற அம்சங்கள் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்றும் முதல்–மந்திரி வி.டி.சதீசன் கூறினார்.

இதற்கிடையே கேரளத்தில் அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து கேரளம் தனியார்பஸ்உரிமையாளர்கள் சங்கத்தினர் கூறுகையில், அரசு பஸ்களில் பெண்களுக்கு இலவச பயணத்தை கொண்டு வருவதன் மூலம் மாநிலத்தில் தனியார் பஸ் தொழில் கடுமையாக பாதிக்கப்படும். ஏற்கனவே நாங்கள் கடும் நஷ்டத்தில் தொழில் நடத்தி வருகிறோம்.

உதிரி பாகங்கள் மற்றும் பெட்ரோல், டீசல் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. மேலும், போக்குவரத்து வழித்தட அனுமதி கட்டணம் போன்றவை மிக அதிகமாக உள்ளது. இதை குறைக்கக்கோரி முதல்–மந்திரி மற்றும் போக்குவரத்து துறை மந்திரியை விரைவில் சந்திக்க உள்ளோம். பெண்களுக்கு இலவச பயணம் கொண்டு வருவதற்கு முன் எங்களிடம் அரசு கலந்து ஆலோசிக்கவில்லை என்றனர்.

# புதுச்சேரி சட்டசபையில் எம்எல்ஏக்கள் பதவியேற்பு!



புதுச்சேரி, மே. 20–

புதுவை சட்டசபை தேர்தல் முடிவுகள் கடந்த 4–ந்தேதி அறிவிக்கப்பட்டது. தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிட்ட என்.ஆர்.காங்கிரஸ் 12, பாஜக 4, அதிமுக 1, லஜக 1 தொகுதியில் வெற்றி பெற்றது. திமுக 5, காங்கிரஸ் 1, தவெக கூட்டணி 3, சுயேச்சை 3 தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

கடந்த 13–ந் தேதி தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் முதல்–அமைச்சராக ரங்கசாமி பொறுப்பேற்றார். அவருடன் பாஜகவை சேர்ந்த நமச்சிவாயம், என்ஆர்.காங்கிரசை சேர்ந்த மல்லாடி கிருஷ்ணாராவ் ஆகியோர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர்.

தேர்தலில் மங்கலம், தட்டாஞ்சாவடி என 2 தொகுதியில் போட்டியிட்டு ரங்கசாமி வெற்றி பெற்றிருந்தார். இதில் தட்டாஞ்சாவடி தொகுதி எம்எல்ஏ பதவியை ரங்கசாமி கடந்த 17–ந்தேதி ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை சட்டமன்ற செயலகம் ஏற்று தட்டாஞ்சாவடி தொகுதியை காலியிடமாக அறிவித்தது.

இதனிடையே தற்காலிக சபாநாயகராக அன்பழகன் நியமிக்கப்பட்டார். கடந்த 18–ந்தேதி தற்காலிக சபாநாயகர் அன்பழகனுக்கு, கவர்னர் மாளிகையில் நடந்த விழாவில் கவர்னர் கைலாஷ்நாதன் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இதைத்தொடர்ந்து முதல்–அமைச்சர் ரங்கசாமி உட்பட 28 எம்எல்ஏக்கள் பதவியேற்க சட்டசபை இன்று கூடியது. காலை 9.37 மணிக்கு சபையை தற்காலிக சபாநாயகர் அன்பழகன் குரலை வாசித்து தொடங்கி உரையாற்றினார்.

தொடர்ந்து சட்டமன்ற செயலாளர் தயாளன் கவர்னர் கைலாஷ்நாதன் தற்காலிக சபாநாயகராக அன்பழகனை நியமித்த உத்தரவை வாசித்தார். பின்னர் தற்காலிக சபாநாயகர் அன்பழகன் உறுப்பினர்கள் பதவி ஏற்கும் நடைமுறைகளை கூறினார்.

இதனையடுத்து முதல்–அமைச்சர் ரங்கசாமி, அமைச்சர்கள் நமச்சிவாயம், மல்லாடிகிருஷ்ணன், எம்எல்ஏக்கள் சிவகொழுந்து, ராஜவேலு, நாஜிம், திருமுருகன், ஜான்குமார், நேரு, ஆறுமுகம், கார்த்திகேயன், செந்தில்குமார், வையாபுரி மணிகண்டன், ராஜசேகர், மீனாட்சி சுந்தரம், அசோக்குமார், அழகானந்தம், கார்த்திகேயன், ஜோஸ் சார்லஸ் மார்டின், மீனாட்சி சுந்தரம், மோகன்தாஸ், டாக்டர் நாராயணசாமி, ராமு, ரவிக்குமார், செந்தில் கவுண்டர், விக்னேஷ் கண்ணன், டாக்டர் விக்னேஷ்வரன் ஆகியோர் வரிசைப்படி உறுதிமொழியை வாசித்து பதவி ஏற்றனர். எம்எல்ஏக்களுக்கு தற்காலிக சபாநாயகர் அன்பழகன் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

**உறுதிமொழியில் இல்லாத வாசகத்தை படித்த நேரு**

புதுவை சட்டமன்றத்தில் புதிதாக தேர்வான எம்எல்ஏக்கள் உறுதிமொழியை வாசித்து பதவி ஏற்றனர். அப்போது நேரு எம்எல்ஏ உறுதி மொழியை வாசித்த போது அதில் இல்லாத ஒரு வரியை குறிப்பிட்டு பேசினார். இதனை தற்காலிக சபாநாயகர் அன்பழகன் சபை குறிப்பில் இருந்து நீக்கினார்.

**தவெக எம்எல்ஏ சாய் சரவணகுமார் ஆப்செண்டு**

புதுவை சட்டமன்றத்தில் இன்று நடந்த எம்எல்ஏ பதவி ஏற்பு விழாவில் திருபுவனை தொகுதி எம்எல்ஏ சாய். சரவணகுமார் பங்கேற்கவில்லை. அவர் மற்றொரு நாளில் சபாநாயகர் அறையில் பதவி எற்பார்.

**சட்டமன்ற கேலரியில் எம்எல்ஏக்கள் குடும்பத்தினர்**

புதுவை சட்டமன்ற கேலரியில் எம்எல்ஏக்கள் பதவி ஏற்பை காண அவர்களது குடும்பத்தினர் வந்திருந்தனர். கேலரி அறை சிறியது என்பதால் குடும்பத்தினர் அனைவரும் ஒரே நேரத்தில் உட்கார முடியாது. இதனால் அந்தந்த எம்எல்ஏக்கள் பதவி ஏற்கும் போது அவர்களது குடும்பத்தினர் வந்து அமர்ந்து பார்த்தனர். இதனால் கேலரியில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் தற்காலிக சபாநாயகர் அன்பழகன் தலையிட்டு சபை காவலர்களை அமைதிபடுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

# ஈரானுக்கு எதிரான போரில் 42 விமானங்களை இழந்தது அமெரிக்கா!



வாஷிங்டன், மே. 20–

ஈரானுக்கு எதிரான போரில் ஆளில்லா விமானங்கள், போர் விமானங்கள் உள்பட 42 விமானங்களை அமெரிக்க இழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்கு எதிராக 'ஆபரேஷன் எபிக் பியூரி' என்ற பெயரில் அமெரிக்காவும், இஸ்ரேலும் போர் புரிந்து வருகின்றன. இந்தத் தாக்குதலில் ஈரானின் உள்கட்டமைப்புகள் மற்றும் ராணுவ உபகரணங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. அதேவேளையில், ஈரான் நடத்திய பதில் தாக்குதலில் அமெரிக்காவும் வீரர்கள் மற்றும் ராணுவ உபகரணங்களை இழந்துள்ளது.

இந்த நிலையில், ஈரானுக்கு எதிரான போரில் இதுவரையில் 42 விமானங்களை அமெரிக்க இழந்து விட்டதாக அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பார்லிமென்ட் ஆய்வு சேவை வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, 24 ஆளில்லா விமானங்கள், 7 வான்வழி எரிபொருள் நிரப்பும் விமானங்கள், 4 எப்–15இ ஸ்ட்ரைக் ஈகிள் போர் விமானங்கள், வான்வழி எச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு விமானம், தரைவழித் தாக்குதல் விமானம், ஹெலிகாப்டர், ட்ரைட்டன் ட்ரோன் என மொத்தம் 42 விமானங்கள் சேதமடைந்துள்ளன, இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

கடந்த மே 12 அன்று நடைபெற்ற பிரதிநிதிகள் சபையின் ஒதுக்கீட்டுக் குழு கூட்டத்தில், ஈரான் மீதான ராணுவ நடவடிக்கைகளுக்கான மதிப்பீட்டுச் செலவு 2 லட்சத்து 80 ஆயிரம் கோடியாக அதிகரித்துள்ளதாக பென்டகன் அதிகாரி தெரிவித்தார்.

# தவெக அமைச்சரவையில் விசிக இடம்பெறுமா? திருமாவளவன் பேட்டி!



சென்னை, மே. 20–

தவெக அமைச்சரவையில் விசிக இடம்பெறுமா? என திருமாவளவன் நிருபர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

இது குறித்து நிருபர்களிடம் விடுதலை சிறுத்தைக்கட்சி தலைவர் திருமாவளவன் கூறியதாவது: அமைச்சரவையில் இடம்பெறுமாறு ஆதவ் அழைப்பிற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். எங்கள் கட்சியின் உயர்நிலை குழு 8ம் தேதி மாலை 6 மணிக்கு கூடியது. ஆன்லைன் கூட்டமாக நடைபெற்றது; 9 மணி அளவில் அது நிறைவு பெற்றது. அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலானவர்கள் அமைச்சரவையிலும் இடம்பெற வேண்டும் என்ற கருத்தை முன்மொழிந்தது அனைவருக்கும் தெரியும். ஆனாலும் நிறைவாக தலைவர் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுகிறோம் என்ற உறுதியை தந்தார்கள். ஆட்சி அமைப்பதற்கு மட்டுமே தங்களது நிபந்தனையற்ற ஆதரவை கொடுத்தோம். பதவியேற்புக்கு பிறகு வேளச்சேரிக்கு வந்த விஜய் தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார். அதை இப்பொழுது மீண்டும் வெளிப்படையாக ஆதவ் வழிமொழிந்து இருக்கிறார். தவெக கூட்டணியில் இணைந்து நாங்கள் தேர்தலை சந்திக்கவில்லை. இன்னொரு கூட்டணி திமுக கூட்டணியில் இடம்பெற்று இருந்தோம். அந்த கூட்டணியில் நாங்கள் இரண்டு இடங்களில் வெற்றி பெற்று இருந்தோம். தவெக ஆட்சி அமைப்பதற்கு இரண்டு இடங்கள் மட்டுமே தேவைப்பட்டதால் எங்களது ஆதரவை நல்கினோம். தற்போது வெளிப்படையாக தவெக முஸ்லிம் லீக், விசிக இடம்பெற வேண்டும் என்று விருப்பதை வெளிப்படுத்தி இருக்கிறது. அவர்களது அழைப்பை மதிக்கிறோம். நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கிறோம். இது குறித்து கட்சியின் முன்னணி பொறுப்பாளர்களுடன் கலந்து பேசி முடிவை அறிவிப்போம். இவ்வாறு திருமாவளவன் கூறினார்.

# தனது அறையில் முதல்-அமைச்சர் விஜய் படத்தை வைக்க பெண் மேயர் மறுப்பு!



கோவை, மே. 20–

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுத் துறை அலுவலகங்களிலும் முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் படத்தை வைப்பதற்கு, அதிகாரப்பூர்வமான புகைப்படம் ஒன்றை செய்தி – மக்கள் தொடர்பு துறை தேர்வு செய்து வெளியிட்டுள்ளது. இந்தப் படம் பிரேம் செய்யப்பட்டு, அனைத்து அரசுத்துறை அலுவலகங்களிலும் வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கோவை மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள கமிஷனர், துணை கமிஷனர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் கூட்ட அரங்குகளில் முதல்–அமைச்சர் விஜய் படம் மாட்டப்பட்டது. இதேபோல், மேயர், துணை மேயர், நிலைக்குழு தலைவர்கள் மற்றும் மண்டலக் குழு தலைவர்கள் அறையிலும் முதல்–அமைச்சர் விஜய் படம் மாட்டப்பட வேண்டும். இவர்கள் அனைவரும் தி.மு.க.வை சேர்ந்தவர்கள் என்றாலும், இதில் துணை மேயர் வெற்றிச் செல்வன் தன் அறையில் முதல்–அமைச்சர் புகைப்படத்தை வைப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால், மேயர் ரங்கநாயகி, அவரது அறையில் முதல்–அமைச்சர் விஜய் படத்தை வைப்பதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். அதே நேரம், மேயர் அறைக்குள் முன்னாள் முதல்–அமைச்சர்கள் கருணாநிதி, மு.க.ஸ்டாலின், முன்னாள் துணை முதல்–அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர்கள் கே.என். நேரு, செந்தில்பாலாஜி ஆகியோரின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மேயர் ரங்கநாயகி கூறும்போது, "எனக்கு ஒதுக்கிய அறையில் மாட்டப்பட்டுள்ள எங்கள் கட்சி தலைவர்கள் படங்களை எடுக்க முடியாது. அவர்களை பார்த்தால் புத்துணர்ச்சி கிடைக்கும். முதல்–அமைச்சரின் புகைப்படத்தை அறைக்கு முன் வைத்திருக்கிறோம். 2027–ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை எனது பதவிக்காலம் இருக்கிறது. அதுவரை என் அறைக்குள் முதல்–அமைச்சர் விஜய்யின் படத்தை வைக்கமாட்டேன்" என்று தெரிவித்தார். இதேபோல், மண்டலக் குழு தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள் அறைகளிலும் முதல்–அமைச்சர் விஜய்யின் புகைப்படத்தை வைக்க ஆட்சேபனை தெரிவித்ததால், கோவை மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.

# பின்வாசல் வழியாக ஆட்சி அமைக்க எடப்பாடி பழனிசாமி நினைத்தார்: ஆதவ் அர்ஜுனா குற்றச்சாட்டு!



சென்னை,மே. 20–

சென்னை கிண்டியில் பொதுப்பணி த்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதா வது:–

அமைச்சரவை விரிவாக்கம் கூடிய விரைவில் அறிவிக்கப்படும். காங்கிரஸ், விசிக, ஐயுஎம்எல் என எல்லோரும். அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தை தெரிவித்திருக்கிறோம். உடனடியாக கலந்தாலோசித்து முடிவு சொல்வதாக சொல்லி இருக்கிறார்கள்; நல்ல செய்தி வரும் என நினைக்கிறோம்.

அன்பான குடும்பம்போல அமைச்சரவை இருக்க வேண்டும் என முதல்–அமைச்சர் விஜய் விரும்புகிறார். வெளியில் இருந்து ஆதரவு கொடுத்துள்ள இடதுசாரிகளின் கொள்கை முடிவுகளை நாங்கள் மதிப்போம். சமூகநீதி அடிப்படையில் இயங்கும் தலைவர்கள், கட்சிகள் அமைச்சரவையில் இணைய வேண்டும்.

தேர்தலில் தோல்வியை தழுவிய பிறகு மக்களின் தீர்ப்புக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி செயல்பட நினைத்ததால் அதிமுகவின் ஒரு தரப்பினர் எங்களுக்கு ஆதரவு தந்தனர். எம்.எல்.ஏ.க்கள் யாருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பது அவர்கள் உரிமை; அவர்களை சி.வி.சண்முகம் வழிநடத்துவார். சட்ட சிக்கல் வந்தால் சி.வி.சண்முகம் சந்திப்பார்; அதிமுக நன்றாக இருக்க வேண்டும் என்பது எங்களது வேண்டுகோள். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா உருவாக்கிய அதிமுகவை நாங்கள் தோழமையுடன் தான் பார்க்கிறோம். நல்ல எதிர்க்கட்சியாக எடப்பாடி பழனிசாமி செயல்பட்டிருக்க வேண்டும். பின்வாசல் வழியாக ஆட்சி அமைக்க எடப்பாடி பழனிசாமி நினைத்தார். திமுகவுடன் எடப்பாடி பழனிசாமி கைகோர்க்க நினைத்ததை தற்கொலைக்கு சமம் என அதிமுகவினர் கருதினர். பாஜகவுடன் அதிமுக சேர்ந்தது மிகப்பெரிய அதிருப்தி என அதிமுக தொண்டர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

திமுக தனது கொள்கைகளை மறந்து அதிமுகவுக்கு ஆதரவளிக்க முயற்சித்தது. மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் இணைந்து குதிரை பேர அரசியலை உருவாக்கினர். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து அமைச்சரவையில் சி.வி. சண்முகம் அணி இடம்பெறுமா? என்ற கேள்விக்கு "யூகங்களுக்கு பதிலளிக்க முடியாது. அமைச்சர் பதவிக்காக அவர்கள் எங்களிடம் வரவில்லை" என கூறினார்.

# வெளியாகும் அஜித்தின் 'கிளாடியேட்டர்ஸ்'!




தமிழ் சினிமாவில் முன்னணி நடிகர்களுள் ஒருவரானவரும், ரசிகர்களால் தல என்றும் அல்டிமேட் ஸ்டார் என்ற பெயருக்கும் சொந்தமானவர் நடிகர் அஜித்குமார். 1993 ஆம் ஆண்டு அமராவதி என்ற தமிழ் திரைப்படம் மூலம் அறிமுகமானவர். தற்போது வரை 60 படங்களுக்கும் மேல் நடித்து தமிழ் திரையுலகில் சிறந்த நடிகராக வளம் வருகிறார்.

நடிப்பதில் மட்டுமில்லாமல், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு உண்மையான தொழில்முறை கார் பந்தய வீரராக இருக்கிறார்.

இவர், 'அஜித்குமார் ரேசிங்' என்ற தனது சொந்த பந்தய அணியையும் தொடங்கி பல்வேறு தொடர்களில் வெற்றி பெற்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்து வருகிறார்.

இவரின் கடைசி படமான 'குட் பேட் அக்லி' கடந்த 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியானது. அதன் பிறகு தனது முழு ஆர்வத்தையும கார் ரேசில் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

இதற்கிடையில், அஜித்குமார் ரேசிங் தொடர்பாக 'கிளாடியேட்டர்ஸ்' என்ற தலைப்பில் புதிய ஆவணப் படம் உருவாகி வருகிறது. இந்த படத்தை ஏ.எல். விஜய் இயக்கத்தில், ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

'கிளாடியேட்டர்ஸ்' படத்தின் டீசர் அவரது பிறந்தநாளன்று வெளியாகி ரசிகர்களின் கவனைத்தை பெற்றது.

'கிளாடியேட்டர்ஸ்' என்கிற தலைப்பில் உருவாகிவரும் நடிகர் அஜித் குமாரின் ரேசிங் ஆவணப் படம் ஆகஸ்ட் மாதம் வெளியாகும் என்ற தகவல் கிடைத்துள்ளது. இந்த தகவல் ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆவண படத்தின் மூலம் ரேசிங் உலகில் அஜித்தின் சாதனைகளை பெரிய திரையில் பார்ப்பதற்கு ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020